**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.101** **நாள்: 25.07.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுமக்களின் பங்களிப்புடன் பொது இடங்களை தூய்மையாக பராமரிக்க "பிளாக்கிங்" (Plogging) உடற்பயிற்சி முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் "சென்னை பிளாக்கிங் சவால்–2019" நிகழ்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்கலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

= = = = =

பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மையை பராமரிக்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரிலும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களின் வழிகாட்டுதலின் படியும், குப்பைகளை தரம் பிரித்து, சேகரித்து, மறுசுழற்சி செய்யவும், தமிழ்நாடு அரசால் தடைசெய்யப்பட்டுள்ள ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எரியப்படும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்கவும் பல்வேறு விதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுமக்களின் பங்களிப்புடன் பொது இடங்களை தூய்மையாக பராமரிக்க "பிளாக்கிங்" (Plogging) உடற்பயிற்சி முறையில் விழிப்புணர்வு ஏற்படுத்த "**சென்னை பிளாக்கிங் சவால்–2019**" (Chennai Plogging Challenge - 2019) என்ற நிகழ்ச்சி ஜூலை 14 அன்று முதன் முறையாக பெருநகர சென்னை மாநகராட்சியால் மண்டலம்–13ல் உள்ள எலியட்ஸ் கடற்கரை பகுதியில் நடத்தப்பட்டது. இதில் பல்வேறு பொது நல அமைப்புகள் மற்றும் பொது மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

**"பிளாக்கிங் சவால்" (**Plogging) **என்றால்** ஆங்கிலத்தில் "pick up" and "jogging" என்பதே "Plogging" என்றழைக்கப்படுகிறது. நடைப்பயிற்சி / சீரான ஓடுபயிற்சி மேற்கொள்ளும்போதே இடையிடையே நின்று, குனிந்து, உட்கார்ந்து கோணிப்பையில் குப்பையை சேகரிக்கும் ஒரு உடற்பயிற்சி தொகுப்பு முறையே **"பிளாக்கிங்" (**Plogging) ஆகும். இப்புதுமையான குப்பை அள்ளும் விழிப்புணர்வு பயிற்சி கடந்த 2016ம் ஆண்டு ஸ்வீடன் நாட்டில் முதன்முறையாக நடைமுறைபடுத்தப்பட்டது. தற்போது இது உலகளவில் பெறும் வரவேற்பை பெற்றுள்ளது. இந்த பிளாக்கிங் விளையாட்டின் மூலம் உடலை வளைத்தல், நீட்டுதல், உட்காருதல், குதித்தல் மற்றும் நடத்தல் போன்ற செயல்கள் இருப்பதால், உடலுக்கு ஒரு நல்ல உடற்பயிற்சியாகவும், முக்கியமாக ஓடுவது, நடப்பது போன்ற உடற்பயிற்சியைவிட சிறந்த பயிற்சியாகவும் உள்ளது. இந்த **"பிளாக்கிங்" (**Plogging) சவால் பயிற்சியை "பொதுமக்களின் தூய்மை இயக்கமாக" மாதந்தோறும் செயல்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சி திட்டம் வகுத்துள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மையை பராமரிக்கும் விதத்தில் **“சென்னை பிளாக்கிங் சவால்–2019”** நிகழ்ச்சி வருகிற ஜூலை 28, 2019 ஞாயிற்றுக் கிழமை அன்று மண்டலம்–11, மவுண்ட் பூந்தமல்லி சாலை, போரூர் ஏரி அருகில் காலை 6.00 மணியளவில் துவங்கவுள்ளது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள கட்டணம் கிடையாது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவிக்கும் தனிநபர்கள் அல்லது குழுவினர்கள் 9445190211 அல்லது 9445194802 என்ற தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொண்டோ அல்லது மவுண்ட் பூந்தமல்லி சாலை, போரூர் ஏரி அருகில் ஜூலை 28, 2019 அன்று காலை 5.45 மணிக்கு முன்னதாக நேரில் வந்து கலந்துகொள்ளலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**